





கழகத்தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில், அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. முன்னெடுப்பில், கழக அணிகள் உட்பட 20 அணிகள் பங்கேற்கும் மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகிறது. இதற்கான வெற்றிக் கோப்பை மற்றும் ஜெர்சிக்களை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் அறிமுகப்படுத்தினார். சிறப்புக்குரிய இந்த முன்னெடுப்பை மேற்கொள்கின்ற விளையாட்டு மேம்பாட்டு அணியை பாராட்டி உரையாற்றினார். இந்த TOURNAMENT மட்டுமன்றி, 2026 தேர்தல் எனும் மக்களுக்கான மாபெரும் TOURNAMENT–லும் கழகம் வெற்றியைக் குவித்திட அனைத்து அணிகளும் உழைத்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

## கழகத் தலைவர் – முதலமைச்சரின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

# கழக அணிகள் உட்பட 20 அணிகள் பங்கேற்கும் 'மாபெரும் கிரிக்கெட் போட்டி'!

## சென்னை விழாவில் வெற்றிக் கோப்பை மற்றும் ஜெர்சிக்களை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிமுகப்படுத்தினார்!

சென்னை,பிப்.16-

**கழகத்தலைவர் - முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில், கழக அணிகள் உட்பட 20 அணிகள் பங்கேற்கும் `மாபெரும் கிரிக்கெட் போட்டி' சென்னையில் நடைபெறுகிறது. இதற்கான வெற்றிக்கோப்பை மற்றும் ஜெர்சிக்களை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நேற்று முன்தினம் குறிஞ்சி முகாமில் அறிமுகப் படுத்தி வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது, ``சிறப்புக்குரிய இந்த முன்னெடுப்பை மேற்கொள்கின்ற விளையாட்டு மேம்பாட்டு அணியைப் பாராட்டினார். இந்த டோர்னமென்ட் மட்டுமன்றி, 2026- சட்டமன்றத் தேர்தல் எனும் மக்களுக்கான மாபெரும் டோர்னமென்ட்டிலும் கழகம் வெற்றியைக் குவித்திட அனைத்து அணிகளும் உழைத்திட வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

கழகத் தலைவர், நம் முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பாக, நடத்தப்பட உள்ள அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டிக்கான ஜெர்சி மற்றும் கோப்பையை அறிமுகப்படுத்துவதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்தச் சிறப்பான முன்னெடுப்பை எடுத்துள்ள கழக விளையாட்டு மேம்பாட்டு அணிக்கு பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### எடுத்துக்காட்டு முயற்சி!

பொதுவாக, கலைஞர் பிறந்தநாள், தலைவர் பிறந்தநாளை முன்னிட்டு, கழகத்தில் இருக்கின்ற ஒவ்வொரு அணியும் தனித்தனியாக போட்டிகள், விளையாட்டுகள் நடத்துவார்கள். ஆனால், விளையாட்டு மேம்பாட்டு அணி மட்டும்தான் எல்லா அணிகளையும் ஒருங்கிணைத்து முதன் முறையாக, ஒரு கிரிக்கெட் போட்டியை நடத்துகிறது. உண்மையிலேயே, இது மற்ற அணிகளுக்கு எடுத்துக்காட்டாக திகழ்கின்ற ஒரு முயற்சி. அதற்கு எனது பாராட்டுகள்.

இப்படி அனைத்து அணிகளும் ஒன்றாகச் சேர்ந்து விளையாடும்போதுதான், அதுவும் விளையாட்டு மூலம் வெவ்வேறு அணிகளில் இருப்பவர்களைச் சந்திக்கும்போதுதான் நமக்குள் இருக்கின்ற பிணைப்பு, ஒற்றுமை அதிகமாகும். ஆகவே, இப்படிப்பட்ட முயற்சியை எடுத்துள்ள விளையாட்டு மேம்பாட்டு அணிக்கும், அதன் செயலாளர் அண்ணன் தயாநிதி மாறன் அவர்களுக்கும் விளையாட்டுத்துறை அமைச்சராக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் ஒரு சர்வதேச கிரிக்கெட் போட்டி நடந்தது என்றால் இரண்டு நாட்களுக்கு முன்பாகவே தொலைக்காட்சியில் விளம்பரம் பண்ணுவார்கள். இரண்டு அணிகள் பயிற்சி செய்வதை எல்லாம் எடுத்துக் காட்டுவார்கள். இப்போது கிட்டதட்ட நம் விளையாட்டு மேம்பாட்டு அணி நடத்துகின்ற போட்டிகூட கடந்த இரண்டு நாட்களாக நீங்கள் பயிற்சி செய்வதை எல்லாம், தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டு இருக்கிறேன். அதெல்லாம் செய்திகளாக வந்துகொண்டு இருக்கின்றன. இதைப் பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. நான் விளையாட வேண்டும் என்று, எனக்குகூட அழைப்பு விடுத்தார்கள்.

### மிகுந்த மகிழ்ச்சி!

அடுத்த இரண்டு நாட்கள் இளைஞர் அணி சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் பேச்சாளர்கள் 200 பேருக்குப் பயிற்சிப் பாசறைக் கூட்டம் நடைபெற இருக்கிறது. அதனால் என்னால் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்ள முடியவில்லை. ஆதலால், இந்த நிகழ்ச்சியில், உங்களையெல்லாம் சந்தித்து, உங்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.



வழக்கமாக ஒவ்வொரு மாவட்டத்திற்குச் செல்லும்போதும், நான்தான் உங்களை வந்து சந்திப்பேன், இன்றைக்கு நீங்கள் எல்லாம் ஒரே இடத்தில் வந்து சந்தித்து இருக்கிறீர்கள் அது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

### விளையாட்டு மேம்பாட்டு அணி!

ஒவ்வொரு அணியும் பயிற்சி எடுப்பதே ஒரு மிகப்பெரிய செய்தியாக வந்துகொண்டு இருக்கிறது. அந்த அளவிற்கு, இந்தப் போட்டிகளுக்கான முன்னெடுப்புகளை எல்லாம் அண்ணன் தயாநிதி மாறன் அவர்களின் தலைமையில், விளையாட்டு மேம்பாட்டு அணி மிகச்சிறப்பாகச் செய்திருக்கிறது.

ஐ.பி.எல் போட்டிகள், டி.என்.பி.எல் போட்டிகளுக்கு எல்லாம் போட்டியாக நமது விளையாட்டு மேம்பாட்டு அணி, இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளது. இதே `குறிஞ்சி முகாம்' அலுவலகத்தில் `அரசு நிகழ்ச்சிகள்', `கழக நிகழ்ச்சிகள்', `பல திருமணங்கள்', `இளைஞர் அணி நிகழ்ச்சிகள்' எனப் பல நிகழ்ச்சிகளை நாம் நடத்திக் காட்டி இருக்கிறோம். ஆனால், இப்படி பிரமாண்டாக, இவ்வளவு சிறப்பான நிகழ்ச்சியை இன்றைக்கு விளையாட்டு மேம்பாட்டு அணி நடத்திக் காட்டி இருக்கிறது.

அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் சொன்னதைப் போல இந்த விளையாட்டு மேம்பாட்டு அணிக்கும், எனக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு. என் பிறந்தநாளான நவம்பர் 27-ஆம் தேதிதான் இந்த அணி தொடங்கப்பட்டது.

### பல்வேறு விளையாட்டுப் போட்டிகள்

நம் திராவிட மாடல் அரசின் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு அமைச்சராக பல்வேறு விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைத்து இருக்கிறேன். கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைத்திருக்கிறேன். சென்ற வருடம்கூட கால்பந்துப் போட்டியை நடத்தினார்கள். அதையும் நான்தான் துவக்கி வைத்தேன். தொடர்ச்சியாக, அந்த அணியைத் துடிப்போடு வைத்து இருக்கிறீர்கள். அதற்கு எனது பாராட்டுகள்.

நான் அடிக்கடி சொல்வதுண்டு. விளையாட்டு மேம்பாட்டு அணியைப் பார்க்கும்போதெல்லாம், எங்களுக்கு கொஞ்சம் பயமாகவே இருக்கும். ஏனென்றால், எல்லோரும் ஸ்போர்ட்ஸ் மேன், பாடி பில்டர். அதேநேரத்தில் எங்களுக்குக் கொஞ்சம் பொறாமையாகவும் இருக்கும். ஏனென்றால், எல்லாவற்றையும் கொஞ்சம் வித்தியாசமாக செய்கின்ற அணி, நம் விளையாட்டு மேம்பாட்டு அணி.

### ஒரு லட்சம் ரூபாய் பரிசு!

பொதுவாக, விளையாட்டுப் போட்டி என்றால், வெற்றிபெறுகின்ற அணிக்குப் பரிசுத்தொகை கொடுப்பார்கள், அப்படி இல்லை என்றால், பரிசு பொருட்கள் கொடுப்பார்கள். ஆனால், இன்றைக்கு இந்தப் போட்டிகளில் பார்த்தீர்கள் என்றால், இரண்டையும் சேர்த்துக் கொடுத்து இருக்கிறார்கள். முதல் பரிசு பெறும் ஆண்கள் அணிக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசுத்தொகை. அதேபோல் ஒரு பைக் பரிசு கொடுக்கிறார்கள். இரண்டாவது பரிசு பெறுகின்ற அணிக்கு 75 ஆயிரம் ரூபாய் பரிசுத்தொகை, அவர்களுக்கும் பைக் கொடுக்கிறார்கள். அதேபோல் வெற்றி பெறுகின்ற மகளிர் அணிக்குப் பரிசுத்தொகையுடன், ஸ்கூட்டி கொடுக்கிறார்கள்.

அண்ணன் பூச்சிமுருகன் புகைப்படம் எடுக்கும்போது சொன்னார், ``இது சுழற்கோ ப்பைத்தான். வருடந்தோறும் இதே கோப்பைதான், என்றைக்காவது ஒரு வருடம், அதை நாங்கள் வெற்றிபெற்று காட்டுவோம்" என்று சொன்னார். அந்த விடாமுயற்சி, அப்படி நம்பிக்கை வைத்திருக்கிறார் பார்த்தீர்களா, `இன்றைக்கு இல்லை என்றாலும் பரவாயில்லை என்றைக்காவது வெற்றிபெறுவோம்' என்று, அதற்கு என் பாராட்டுகள்.

### கோபாலபுரத்தில் கிரிக்கெட்!

அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் பயங்கரமான பிட்னஸ் ப்ரீக். என்னைத் தூக்கி வளர்த்தவர் அவர். நாங்கள் எல்லோரும் சேர்ந்து கோபாலபுரத்தில் கிரிக்கெட் விளையாடி இருக்கிறோம்.

இப்போதும் தொகுதிகளில் இரண்டு பேரும் ஒன்றாகத்தான் நிகழ்ச்சிகளுக்குச் செல்வோம். களைப்பாக இருக்கும், பசிக்கும். அப்போது அங்கு இருக்கின்ற கழக நிர்வாகிகள் வீட்டில் ஏதாவது சாப்பிடுவதற்குக் கொடுப்பார்கள். நான் உடனே எடுத்து சாப்பிட்டு விடுவேன். டீ, காபி எது கொடுத்தாலும், எடுத்துக் குடித்துவிடுவேன். அவர் எதையுமே தொட மாட்டார்.

விளையாட்டு மேம்பாட்டு அணிக்கு, சரியான செயலாளர் என்றால், அது அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள்தான். விளையாட்டு மேம்பாட்டு அணிக்கு தேவையான முழுசக்தியுடன் இருப்பார். எப்போதும் 100 சதவிகிதம் சார்ஜ் போட்ட மாதிரி இருப்பார். தான் இருக்கின்ற இடம், அது எந்த இடமாக இருந்தாலும், 100 சதவிகிதம் அனைவரும் ஈசியாக இருக்கின்ற மாதிரி எல்லோரிடமும் கலகலப்பாக இருந்துகொண்டு, அதேநேரத்தில் நம் கழகத்தலைவரின் கம்பீரக் குரலாக நாடாளுமன்றத்தில் எப்போதெல்லாம் வேண்டுமோ, அப்போதெல்லாம் குரல் கொடுப்பவர்தான் அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள். எனவே, அவர் நடத்துகின்ற முதல் போட்டி. இந்தப் போட்டியை வருடந்தோறும் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### நான்கு பெண்கள் அணிகள்!

திராவிட முன்னேற்றக் கழக உடன்பிறப்புகள் எல்லாம், அரசியல்களத்தில் மட்டுமல்ல, ஆடுகளத்திலும் நாம் திறமைசாலிகள் என்பதை, இந்த கிரிக்கெட் போட்டிகளின் மூலம் நிரூபிக்க வேண்டும். உங்களின் திறமைகளை, நல்ல முறையில் வெளிக்காட்டுங்கள். 16 ஆண்கள் அணிகள் இருக்கிறீர்கள். அதேபோல் நான்கு பெண்கள் அணிகளும் இடம் பெற்றுள்ளன. அனைத்து அணிகளுக்குள்ளும் விளையாட்டுத் திறனுடன், சிறப்பாக போட்டி இருக்க வேண்டும். பொறாமை இருக்கக்கூடாது.

2026-ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் சொன்னதைப்போல், இந்த `டோரனமென்ட்' நமக்கு மிக மிக முக்கியமான டோரனமென்ட் இதைவிட மிக மிக முக்கியமான டோரனமென்ட் என்றால், அது 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் டோரனமென்ட்தான்.

### தலைவர் தலைமையிலான அணி!

நமக்கு எதிரே நிறைய அணிகள் இருக்கலாம். புதிதாக அணிகள் உருவாகலாம். ஆனால், வெற்றிபெற்று, கப் அடிக்கப்போவது நம் தலைவர் தலைமையிலான தி.மு.க தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி அணி என்பதை நீங்கள் உறுதிசெய்ய வேண்டும். ஏனென்றால், தமிழ்நாட்டு மக்களுக்கு என்றைக்கும் மனதுக்குப் பிடித்த நெருக்கமான அணி என்றால், அது நம் தலைவர் தலைமையிலான தி.மு.க. அணிதான். ஒரு போட்டி என்றால், அதற்கான முன்தயாரிப்பு, பயிற்சிகள், உடற்பயிற்சிகள் இதெல்லாம் மிகமிக முக்கியம். அவை இருந்தால்தான் நாம் வெற்றிபெற முடியும். ஆகவே, இந்தப் போட்டிக்கு மட்டுமல்ல, வரப்போகின்ற 2026- சட்டமன்றத் தேர்தல் என்ற மிகப்பெரிய போட்டிக்கும் இப்போதிலிருந்தே அந்தப் பயிற்சிகளையும், வாம்-அப்பையும் நாம் தொடங்கியாக வேண்டும். எப்படி இந்தப் போட்டியில் நீங்கள் அணி, அணியாகப் போட்டிப்போட்டு விளையாடுகிறீர்களோ, அதேமாதிரி 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கும் நாம் அணி, அணியாக உழைக்க வேண்டும், மக்களைச் சந்தித்தாக வேண்டும்.

### சிறந்த பிறந்த நாள் பரிசு!

அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் பேசும்போது சொன்னார். விளையாட்டு மேம்பாட்டு அணி துவங்கி 26 மாதங்கள் ஆகின்றன. ஆனால், 200-க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகள் நடத்தி இருக்கிறோம் என்று சொன்னார். அவர் சொன்ன அதே 200 நம் மனதில் நிற்க வேண்டும். நம் தலைவர் சொல்லியிருக்கிறார். 200-க்கும் அதிகமான தொகுதிகள் நாம் வெற்றிப் பெற்றாக வேண்டும் என்று நம் தலைவர் சொல்லி இருக்கிறார். அதை நாம் செய்து காட்ட வேண்டும்.

இந்தப் போட்டியை சிறப்பாக நடத்தியதுபோல் 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலும் நாம் வெற்றிப்பெற்று கொடுப்பதுதான் நம் தலைவருக்கு நாம் கொடுக்கின்ற உண்மையான சிறந்த பிறந்த நாள் பரிசு என்று கூறிக்கொண்டு, எத்தனையோ அணிகளாக நாம் பிரிந்து விளையாடினாலும், ஒன்றே ஒன்றை மட்டும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். நாம் அனைவரும் முத்தமிழறிஞர் கலைஞரின் வழியில் வந்த நம் தலைவர் அணி, என்பதை மனதில் வைத்துக் கொண்டு இந்த விளையாட்டு மேம்பாட்டு அணி நடத்துகின்ற கிரிக்கெட் போட்டி மாபெரும் வெற்றி பெற வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்!

அமைச்சர்கள் செந்தில்பாலாஜி, மா. சுப்ரமணியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, டி.ஆர்.பி.ராஜா, சி.வி.கணேசன், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதிமாறன், சென்னை மாநகர மேயர் பிரியா, நாடாளு மன்ற உறுப்பினர்கள் தமிழச்சி தங்கபாண்டியன், வில்சன், அப்துல்லா, கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் கிருஷ்ணசாமி, தாயகம்கவி, தமிழரசி, எழிலரசன், மருத்துவர் எழிலன், எபினேசர், பிரபாகர்ராஜா, முத்துராஜா, கிரி, அரவிந்த்ரமேஷ், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மகேஷ்குமார், பூச்சிமுருகன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் மயிலை த.வேலு, ஐ.பி.செந்தில், சிற்றரசு, ராஜா, விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநில துணைச் செயலாளர்கள் எஸ்.ஆர். பார்த்திபன், சுரேஷ் மனோகர், நிவேதா ஜெசிக்கா, ஏ.வி.ஆர்.கோபால்ராம், எஸ்.கார்த்திக், வாசிம் முபாரக், கௌதமன், தனுஷ்குமார், பி.கே.பாபு, முகமது இஸ்ரத், கழக இளைஞர் மாநில துணைச் செயலாளர்கள் ஜி.பி.ராஜா, பிரபு கஜேந்திரன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.